2. அறிவிப்பு.

மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) ;

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ;

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ;

மேலும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) ;

5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981).

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

** ** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்க வில்லை. I am not allowing.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 மார்ச் 4

THIRU. V. KRISHNAMOORTHY : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am not going to allow. பாயின்ட் ஆப் ஆர்டரில் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள முடியாது. சட்டப்படி என்னென்ன வழிகளில் எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அப்படித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறியதை நான் அனுமதிக்கவில்லை. அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** ** **

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி வெளிநடப்பு செய்தார்.)

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று காலையில் வேலூர் மத்தியச் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்கிற முறையில் இதைக் கேட்க இன்றைக்கு உங்களுக்கு அனுமதி கொடுத்தால் எல்லோரும் இது போலவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவார்கள். நடைமுறை விதிகள் மாறுபடுகிறபோது தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். இதுபோன்ற விஷயங்களை, வந்தவுடன் அமைச்சரிடம் நேரில் சொல்லிவிடலாம். அவர்களே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். அவையில் எழுப்ப வேண்டுமென்றால் 'பிரைவேட் நோட்டீஸ் குவஸ்டின்' என்ற அளவில் உங்கள் கட்சித் தலைவர்மூலம் தனியே எழுதிக் கொடுங்கள்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வந்தவுடனேயே எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அதைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டு விட்டார்கள். உடனடியாக விசாரிக்க ஏற்பாடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1981 மார்ச் 4] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

செய்திருக்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னையை இனி நீட்டிக் கொண்டு போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** நடந்தது எதையும் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம்.

[முற்பகல் 10—20]

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) திரு. அ. ரகுமான்கான் மீது— தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் அவர்கள் 4—2—1981 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். திரு. ரகுமான்கான் அவர்கள் வேண்டுமென்றே தவறு என்று தெரிந்திருந்தும், பேரவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் சில தவறான தகவல்களைப் பேரவைக்கு அளித்தார் என்பது தான் டாக்டர் சமரசம் அவர்களின் குற்றச்சாட்டு. இதற்குத் திரு ரகுமான்கான் அவர்கள் விளக்கம் அளித்தார். எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று கூறியிருந்தேன். எனது தீர்ப்பு.

1981-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் நாள் அன்று திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தவறான தகவல்களை அவைக்குக் கூறியதாகக் குற்றம் சாட்டினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளித்தார். இதற்குப் பிறகும், திரு ரகுமான்கான் தன் குற்றச் சாட்டை வலியுறுத்திப் பேசியுள்ளார் என்பது டாக்டர் சமரசம் அவர்கள் கருத்து.

திரு ரகுமான்கான் முதலில் குற்றச்சாட்டுக்களைக் கூறிய போதும் சரி, பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குற்றம் சாட்டிப் பேசியபோதும் சரி தகுந்த முழு ஆதாரங்களைத் தன்னிடம் வைத்திருக்கவில்லை. அவர் தன்னிடம் இருந்த ஆதாரங்களைக் கொண்டு குற்றச் சாட்டுகளைக் கூறினார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.